# ராயல் என்ஃபீல்ட் மோட்டார்சைக்கிளை ஓட்டிச் சென்ற துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங்



ரைடர்ஸ் சிங்கப்பூர் அமைப்பு ஏற்பாடு செய்த தேசிய தின, இன நல்லிணக்க நாள் நன்கொடைத் திரட்டில், துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங் ராயல் என்ஃபீல்ட் கிளாசிக் 500 ரக மோட்டார்சைக்கிளை ஓட்டினார்.

14 Aug 2022 20:34 | மாற்றம் செய்யப்பட்ட நாள் / நேரம்: 14 Aug 2022 21:26

கித்தார் இசைக்கலைஞர், டிக்டாக் பிரபலம், என பல பரிமாணங்கள் உள்ள துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங் தற்போது புதுத் திறனை வெளிக்காட்டியுள்ளார்.




ராயல் என்ஃபீல்ட் கிளாசிக் 500 ரக மோட்டார்சைக்கிளை ஓட்டி சிறுவர் புற்றுநோய் அறக்கட்டளைக்காக அவர் நன்கொடை திரட்டினார்.

நன்கொடை திரட்டுக்கு ரைடர்ஸ் எயிட் சிங்கப்பூர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் 14) அன்று பிற்பகல் ஒரு மணி அளவில் தொடங்கியது.

தெம்பனீஸ் கனரக வாகன நிறுத்துமிடத்தில் தொடங்கிய வாகன ஓட்டத்தில் 700க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் கலந்துகொண்டனர்.

ரைடர்ஸ் எயிட் சிங்கப்பூர் அமைப்பின் தலைவர் திரு சூரிய குமார், இதுவரை 30,000 வெள்ளி நன்கொடை திரட்டப்பட்டதாகக் கூறினார்.

வாகன ஓட்டத்தில் பிற்பகல் 1.45 மணி அளவில் நிதி அமைச்சருமான திரு வோங் சேர்ந்துகொண்டார்.



வாகன ஓட்டத்தைத் தொடங்கும் முன்னர் துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங். படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்

பாசிர் ரிஸ்ஸில் உள்ள அல்-இஸ்திக்ஃபர் பள்ளிவாசலிலிருந்து லோயாங்கில் உள்ள துவா பேக் கோங் சீன ஆலயம் வரையில் மற்றவர்களுடன் சேர்ந்து திரு வோங் சென்றார்.

பின்னர் துவா பேக் கோங் ஆலயத்தில் பேசிய அவர், பல்லாண்டுகளுக்குப் பின்னர் மோட்டார்சைக்கிள் ஓட்ட தமக்கு வாய்ப்பு கொடுத்த ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி கூறினார்.

மோட்டார்சைக்கிள் ஓட்டி இருபது ஆண்டுகள் ஆவதாகவும் கடைசியாக அமெரிக்காவில் மாணவராக இருந்தபோதுதான் தாம் அதை ஓட்டியதாகவும் அவர் கூறினார்.



நிகழ்ச்சியில் ஓட்டிய மோட்டார்சைக்கிளில் திரு லான்ஸ் வோங் கையெழுத்திட்டார். படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்



திரு வோங் இளமைக்காலத்தில் மோட்டார்சைக்கிள் ஓட்டுவார் என்று கேள்விப்பட்ட பின்னர் அவரைத் தொடர்புகொண்டதாக திரு சூரியகுமார் கூறினார்.

"வழக்கமாக, நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் சிறப்பு விருந்தினர்கள் பின்னால் அமர்ந்துசெல்வார்கள். ஆனால் திரு வோங் தாமே மோட்டார்சைக்கிளை ஓட்ட விருப்பம் தெரிவித்தபோது எங்களுக்கு இன்ப அதிர்ச்சி கிடைத்தது," என்று திரு சூரியகுமார் விவரித்தார்.




துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங் மோட்டார்சைக்கிளுடன் இருப்பதுபோல காட்டும் ஓவியத்தை ரைடர்ஸ் எயிட் சிங்கப்பூர் அமைப்பின் தலைவர் திரு சூரியகுமார் அவருக்கு அன்பளிப்பாக வழங்கினார். படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்

**#சிங்கப்பூர் #லாரன்ஸ்வோங் #துணைப்பிரதமர்**

தொடர்புடைய கதைகள்